**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# ஸ்ரீவைகானஸர்களுக்கு தேவலகத்வதோஷம் கிடையாது

(சேங்காபுரம் ஸ்ரீவைகாநஸஸேவாரத்னம் கே.வேங்கடேசபட்டாச்சாரியார்

ஸ்ரீவைகானஸர்கள் ஸ்ரீமன்நாராயணனை அர்ச்சிக்கப் பிறந்தவர்கள். இவர்கள் பிரம்மசாரியாக, க்ருஹஸ்தர்களாக, வானப்ரஸ்தர்களாக இருந்தாலும் வாழ்க்கை முழுவதும் தன்னை ஸ்ரீவிஷ்ணுவினிடத்தில் அர்பணித்துக் கொண்டுள்ளதால் ஸ்ரீமன்நாராயணனுக்கு ஸமமானவர்கள். (அர்ச்சக: ஸ: ஹரி: ஸாக்ஷாத்). ஸ்ரீவைகானஸம் ப்ரம்மசாரிக்கு ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க முழுமையாக அதிகாரத்தை அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ப்ரம்மசாரீ க்ருஹஸ்தச்ச விப்ரோ வைகானஸஸ்த்ததா/
குர்வந்தோ நிஜகர்மாணி விஷ்ணுமேவ யஜந்தி யே//

(தசவிதஹேதுநிருபணம்)

வ்ருத்தவான் ஸம்யவாதீ ச ஸ்னானசீலச்ச யோகவித்/
க்ருஹஸ்தோ ப்ரம்மசாரீ வா பக்த்யைவார்ச்சன மாரபேத்//
யதோபனயனாதக்னௌ ஸமிதாதானமர்ஹதி/
ததோபனயனாதூர்த்வம் விதினார்ச்சனமர்ஹதி/
ப்ரதிஷ்டாமுத்ஸவம் கர்த்தும் ப்ரம்மசாரீ ஸமர்ஹதி// ற

(அர்ச்சனாநவநீதம்)

பொதுவாக தர்மத்தில் கூறப்படுவதாவது - பொருளின்மேல் ஆசை கொண்டு மூன்று வருடங்களுகள் இடைவிடாது தேவாலயத்தில் பூஜையை மேற்கொண்டால் அவர் தேவலகர் என்றும் இவர்களை யக்ஞத்திருந்தும், ச்ராத்தாதிகளிருந்தும் ஒதுக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

யோ தேவம் பூஜயேத்விப்ரோ வித்தார்த்தீ வத்ஸரத்ரயம்/
ஸ வை தேவலகோ நாம ஹவ்யகவ்ய பஹிஷ்க்ருத://

பூர்வபக்ஷத்தில் - தேவலகம் என்று கூறப்படும் தோஷம் 1. ஒரு பிராம்மணர் சாதாரணமாக தேவதைகளை வழிபடுவதனாலே? 2. ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸங்களில் (பூஜை செய்வது) கூறியுள்ளதனாலா? அல்லது 3. மற்றவர்களுடைய த்ரவ்யங்களால் தேவதைகளை மட்டும் முக்கியமாக பூஜை செய்வதனாலா?

ஸித்தாந்தம் (பதில்) -

1. நம்முடைய இந்து கலாசாரத்தின்படி அன்றாட வாழ்க்கை (நித்ய கர்மானுஷ்டானங்கள்) என்பது ஸ்ரீவிஷ்ணுவை த்ருப்திபடுத்தி நம்முடைய பாபங்களை அழிப்பதாக உள்ளதால் தேவதைகளை வழிபடுவதால் தோஷம் ஏற்படுகிறது என்பது ஒப்புக்கொள்ள முடியாததாகும்.

2. அக்னியையும் தேவர்களுக்கு தலைவனாக விளங்கும் உயர்ந்த ஸ்ரீவிஷ்ணுவையும் அர்ச்சிப்பதாலே உலகத்திலுள்ள அனைவரையும் அர்ச்சித்த பலன் கிடைக்கின்றது என்று கூறியுள்ளதாலும், ரிக்வேத ப்ராம்மணத்தில் ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்கும்படி கூறியுள்ளதாலும், ஸ்ரீவிஷ்ணுவே ஐந்து

ரூபங்களாக பரிணமித்து ஒன்றாக விளங்குகிறார் என்பதாலும், இதிஹாஸங்களில் “ஹே விஷ்ணுவே உன்னை எவ்வாறு அர்ச்சிக்க வேண்டும்?” என்று குறிப்பிட்டு வேதவேதாந்தங்களை அறிந்த ஸ்ரீவைகானஸர்கள் அர்ச்சிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாலும், ஸ்ரீவிஷ்ணுவின் திரு ஆராதனம் (பூஜை) மோக்ஷத்தை அளிக்கவல்லது என்று கூறியுள்ளதாலும் ச்ருதி, ஸ்ம்ருதிகளினால் தோஷமேற்படுகிறது என்பது பொருந்தத்தக்கதல்ல. மற்றவர்களுடைய த்ரவ்யங்களால் ஆலயார்ச்சனம் செய்வதாலும் அப்படி பண்ணும்போது தேவபாகத்தை அர்ச்சகர்கள் ஸ்வீகரிப்பதனால் தேவலகத்வம் என்கிற தோஷம் ஏற்படுகிறதா? என்றால் ஸ்ரீமத்விகனஸர் மிகவும் தெளிவாக தோஷமேற்படாது என்கிறார்.

ஸ்ரீவைகானஸம் ஆனந்தஸம்ஹிதையில் ஸ்ரீமன்நாராயணனால் உற்பத்தி பண்ணப்பட்டவர்கள் அவருடைய ப்ரசாதத்தை புசிக்கவேண்டும் என்றும் இதனால் தோஷம் ஏற்படாது என்றும் இதனை எடுத்துக் கொள்ளாவிடில் தோஷமேற்படும், பாபம் ஸம்பவிக்கும் என்றும் கூறியுள்ளார்.

> ததா த்வதனுஜீவத்வே த்வத்த்ரவ்யானுபவே ஸதி/
> யத்பவேத் தோஷ உத்பன்ன இதி சிந்தாகுலோSஸ்ம்யஹம்//
> அதோவாச ஹ்ருஷீகேசோ பீரும் தம் முனிஸத்தமம்/
> வைகாநஸானாம் தத்தோஷோ நாஸ்தி மத்க்ருதகர்மணாம்//
> மத்ரவ்யம் ஹவ்யகவ்யார்த்தே தாநாப்யாகதபூஜனே/
> முக்யமேவாஸ்து பவதாம் ஸதா மத்கர்ம குர்வதாம்//

இங்கு முக்கிய விஷயமாவது - பகவான் ஸ்ரீமன்நாராயணன் ‘‘பஞ்சரஸ்த சுக இவ’’ என்று கூண்டில் அடைக்கப்பட்ட கிளியைப்போன்று அர்ச்சகர்களுக்குக் கட்டுப்பட்டு வேண்டியவற்றை அனைவருக்கும் அளிப்பதாக ஸ்ரீவைகானஸமும் மற்ற சாஸ்த்ரங்களும் பேசுகின்றன. ஆதலால் ஸ்ரீவைகானஸ அர்ச்சகர்களுக்கு அர்ச்சையால் தோஷங்கள் ஏற்படாது என்பது தின்னம். ‘‘மத்ரவ்யம் க்ஷேத்ரபிம்பா’’ என்கிற பகவத் வாக்கியத்தின்படி ஸ்ரீமன்நாராயணனுடைய பொருள் அர்ச்சகர்களுக்கு சொந்தமானது. கௌமுதிக நியாயமாக சந்திரன் என்று சொன்னால் சந்திரனால் ஏற்படும் ஆனந்தம், மன: ஆஹ்லாதகரத்வம் போன்றவை மனதில் ஏற்படுவதால் பகவான் அர்ச்சக பராதீனர் என்பதால் பகவத் விக்ரஹங்களை விற்பது கூட தோஷமாகாது என்பது கருத்தாகும். (பகவத் விக்ரஹ விக்ரயே க்ருதோ஽பி ந தோஷ:). யாகம் செய்யும் காலத்தில் பிரதான ஆசார்யனுக்கு தக்ஷிணை 21 நிஷ்கம் (அதாவது 32 உளுந்து போன்ற தங்க மணிகள் ஒரு நிஷ்கம் எனப்படும், 32ஷ்21=672 தங்கமணிகள்) தங்கம் அளித்து பூஜிக்கும்படி கூறியுள்ளது. இதில் பாதியளவு ருத்விக் ஸ்தானம் வஹிப்பவர்களுக்கும், ருத்விக் தக்ஷிணையின் பாதியளவு மற்றவர்களுக்கும் தக்ஷிணாதானம் வழங்க கூறப்பட்டுள்ளது. இதற்கு சமமாக பணமும் கொடுக்கலாம்.

> ஏகவிம்சதி நிஷ்கந்து தத்த்யாதாசார்ய தக்ஷிணாம்/
> ருத்விஜந்து ததர்த்தம் ஸ்யாத்ததர்த்தமிதரஸ்ய ச//

மனு மற்றும் வ்யாசரின் வாக்கியப்படி யாகத்தில் தக்ஷிணை பெறுவதால் ப்ரம்ம தேஜஸ் குறையும் என்று கூறியுள்ளது. இதற்கு பிராயச்சித்தமாக யாகம்

செய்வதற்காக ஈட்டும் பொருட்களை யாகம் செய்து முடித்தபின் மூன்று நாட்கள் வேதத்தை பாராயணம் செய்தும், ஸவித்ருதைவத்யமாக காயத்ரி ஜபத்தை பண்ணிய பிறகும் யாகத்தின் மீதமுள்ள பொருட்களை எடுத்துக்கொள்வதால் தோஷம் ஏற்படுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாடு ஸோம யக்ஞுங்கள் போன்றவற்றை பண்ணுவதற்கு கூறப்பட்டதாகும் என்று சாஸ்த்ரங்கள் பரிந்துரைக்கிறது. நாம் எந்த வேலையை மேற்கொண்டாலும் சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டு செய்தால் அது தோஷமாகாது என்கிறார் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் –

> தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ/
> ஞாத்வா சாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி//

சாஸ்த்ரத்தின் ஆக்ஞையை மீறுபவர்கள் என்னுடைய பக்தர்களாயினும் அவர்கள் வைணவர்களல்ல (மத்பக்தோ஽பி ந வைஷ்ணவ:) என்று குறிப்பிடுகிறார். ஆதலால் சாஸ்த்ர முறைப்படி ஆலயார்ச்சனம் செய்வதால் தோஷமேதும் ஏற்படாது என்பது தெளிவாகிறது.

இங்கு கூறப்படும் தேவலகம் என்கிற தோஷம் ஜாதியை முதன்மையாகக் கொண்டதா? கர்மாவை முதன்மையாகக் கொண்டதா? என்ற கேள்விகள் எழுகின்றன. பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கீதையில் ‘‘சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச:’’ என்று கூறியுள்ளதால் ஜாதியை முதன்மையுடையதாகாது. பற்பல காரணங்களினால் கர்மபரம் என்றால் விஹிதகர்மபரமா? அவிஹிதகர்மபரமா?. விஹிதகர்மபரமென்பது ச்ருதிஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளது என்றும் அதை நாம் அனைவரும் கடைபிடிக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் தோஷமில்லை என்பதாகும். அவிஹிதமென்பது யாரும் கடைவிடிக்காததானதால் இதைப்பற்றி கவலையில்லை. தனது சூத்ரத்தின்படி தான் உயர்ந்தவனாகி மற்றவர்களையும் உயர்ந்த நிலையை அடைய இந்த அர்ச்சா சாஸ்த்ரம் பேருதவி செய்கிறது. ஆதலால் ஸ்ரீவைகானஸத்தின்படி 18 ஸம்ஸ்காரங்களையும் முழுமையாகப் பெற்றவர்கள்மூலம் ஆலயார்ச்சனம் மேற்கொள்வதால் எவ்வித தோஷமும் ஏற்படாது. ஏனெனில் அவர்கள் சிறிய வயது முதல் பஞ்சகாலபராயணர்களாகி ஸ்ரீவிஷ்ணுவினிடத்தே இரண்டற கலந்து ஸ்ரீஹரியாகவே திகழ்வதால் அவர்களுக்கு எவ்வித தோஷமும் ஸம்பவிக்காது.

> வைகாநஸாஸ்து யே விப்ரா: ஹரிபூஜன தத்பரா:/
> ந தே தேவலகா: ப்ரோக்தா விஷ்ணுபாதாப்ஜஸம்ச்ரயாத்//

இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது ஸ்ரீவைகானஸர்களும் ஸ்ரீவைகானஸர்களால் ஆராதிக்கப்படும் திவ்யதேசங்களும், கிராமத்து ஸன்னிதிகளும் உயர்ந்ததாகவே கருதப்படுகிறது. எவ்வித எதிர்பார்ப்புமின்றி இவ்வுலகத்தின் ஸுபிக்ஷத்திற்காக “லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து” என தினமும் அர்ச்சா கைங்கர்யத்தை செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஸ்ரீவைகானஸர்களின் ஸேவை மேன்மேலும் வளர எம்பெருமான் ஸ்ரீமன்நாராயணனை ப்ரார்த்திப்போமாக.

மங்களம்